முச்சந்தி முரளி



“குலைகுலையா முந்திரிக்காய் இருக்கிறதால நரியார் சுத்திச் சுத்தி வாறார் கண்டியளோ”

Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 183

திங்கட்கிழமை
27 மே 2024

வைகாசி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# ஆனைக்கோட்டையில் ஜூனில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சி

## தமிழர்களின் வரலாற்றில் திருப்புமுனையாகுமா?

யாழ்ப்பாணம், மே 27

பெருங்கற்காலப் பண்பாட்டை விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கக் கூடிய வகையிலான சான்றுகள் கிடைக்கப்பெறும் என நம்பப்படும் ஆனைக்கோட்டையில், அடுத்த மாதம் அகழ்வாராய்ச்சிப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

09

## இனத்தின் விடுதலைக்காக நாம் ஓரணியில் நிற்போம்

### ரணிலின் பேச்சுக்கு தமிழ்த் தலைவர்கள் பதிலடி

யாழ்ப்பாணம், மே 27

இனத்தின் விடுதலைக்காக ஒரே நிலைப்பாட்டில் நாம் தீர்மானத்தை எடுப்போம் என தமிழ்த் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

09



## வவுனியா பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் உருவாக்கப்படும்

### மாங்குளத்தில் வைத்து ரணில் தெரிவிப்பு

முல்லைத்தீவு, மே 27

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையை தேசிய மருத்துவமனையாக மாற்றத் தீர்மானித்துள்ளோம். மேலும் மன்னார் மருத்துவமனையை அபிவிருத்தி செய்வோம். அதேவேளை வவுனியா மருத்துவ

11

## வடக்கை அபிவிருத்திசெய்ய என்னுடன் கைகோருங்கள்

### முல்லைத்தீவில் ரணில் அழைப்பு

முல்லைத்தீவு, மே 27

நாம் அனைவரும் ஒன்றிணைந்து வடக்கு மாகாணத்தை துரிதமாக அபிவிருத்தி செய்வோம். அதற்கு இதுவே சரியான தருணமாகும். இதற்காக அனைவரையும் எம்முடன் இணையுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

11

## ரணிலுக்கு 'ஐஸ்'!

முல்லைத்தீவு, மே 27

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வன்னியில் நேற்று பல்வேறு நிகழ்வுகளில் பங்கெடுத்த நிலையில் அவற்றில் பங்கேற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் வினோநோகராதலிங்கம்

11

### கேப்பாபிலவு காணி தொடர்பில்

## ஆராய்வதற்கு பணிப்பேன்!

### ரணில் தெரிவிப்பு

முல்லைத்தீவு, மே 27

கேப்பாபிலவு மக்களின் பிரச்சினையை விரைவாகக் கண்டறிந்து அதற்குத் தீர்வுகாணுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கவுள்ளேன்.

09

## பட்டதாரி ஆசிரியர்கள் 566 பேருக்கு நியமனம்

### அமைச்சரவை அனுமதி என்கிறார் ஆளுநர்

முல்லைத்தீவு, மே 27

வடக்கு மாகாணத்தில் 376 பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். மேலும் 566 பேருக்கு நியமனம் வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் ஜனாதி

09

### ஜனாதிபதியின் வவுனியா வருகை:

## கறுப்புக்கொடி போராட்டம்!

வவுனியா, மே 27

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வவுனியா வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கறுப்புக்கொடிப் போராட்டம் நடத்தப்பட்டது.

11

## முன்பள்ளி ஆசிரியர்கள் ஜனாதிபதிக்கு மனு

வவுனியா, மே 27

வவுனியா வடக்கு முன்பள்ளி ஆசிரியர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மனுவொன்றை நேற்று மாலை கையளித்துள்ளனர்.

09

### யாழ். நகரப் பகுதியில்

## களவாடப்பட்டன 32 மோ. சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், மே 27

யாழ். நகரப் பகுதியில் மோட்டார் சைக்கிள் திருட்டு அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. ஆலயங்களுக்குச் செல்வோர் கடைகளுக்குச் செல்வோர் மோட்டார் சைக்கிள்களை அவதானமில்லாது நிறுத்திவிட்டுச்

09

## மாணவிகளுடன் தவறான நடத்தை ஆசிரியர் ஒருவர் விளக்கமறியலில்

விரிவு :- பக். 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலுடனான உறவு எப்போதும் துண்டிக்கப்படாது!

## இலங்கை அரசு அறிவிப்பு



கொழும்பு, மே 27

**இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான உறவில் விரிசல் விழவோ அல்லது துண்டிக்கப்படவோ அனுமதிக்கப்போவதில்லை என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

பலஸ்தீனத்துக்கு ஆதரவாக அண்மையில் கொழும்பில் பெரியதொரு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, இஸ்ரேலுடனான உறவுகளை இலங்கை முற்றாகக் கைவிட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இதையடுத்தே, இஸ்ரேலுடனான உறவில் இலங்கை தொடர்ந்தும் நெருக்கம் காட்டும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

2000ஆம் ஆண்டின் பின்னர் நாங்கள் இஸ்ரேலுடன் நெருக்கமான உறவைப் பேணி வருகிறோம். ஆனையிறவுத் தாக்குதலின் போதும், போர் நடைபெற்ற காலத்திலும் இஸ்ரேல்தான் எமக்கு கிபீர் விமானங்களையும் ஆயுதங்களையும் தந்துதவியது. நடைபெறவுள்ள தேர்தல்களில் முஸ்லிம்களின் வாக்குகளை இலக்காகக் கொண்டுதான் இஸ்ரேலுடனான உறவைக் கைவிட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றார். அவருடைய கருத்துகள் உள்நோக்கம் கொண்டவை. காஸா விவகாரத்தில் தலையிடுவதில்லை என்பது 15 ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கை எடுத்த முடிவு என்று அமைச்சர் மனுஷ மேலும் தெரிவித்தார். (ம-44)

# தேயிலை உற்பத்தி மேம்படுத்தப்படும்

### விவசாய அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 27

அதிக வருமானம் ஈட்டும் துறையாகவுள்ள தேயிலை உற்பத்தித்துறையை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேயிலையை மீண்டும் உலகத்தரம் வாய்ந்த நிலைக்குக் கொண்டு செல்வதற்காக பல புதிய வேலைத்திட்டங்களை இணைத்துள்ளோம். சிலோன் தேயிலை நாமம் உலகத்தரம் வாய்ந்தது. இன்று தேயிலை ஏற்றுமதியில் போட்டித்தன்மை அதிகரித்துள்ளது. தேயிலைத்துறையை அபிவிருத்தி செய்வதற்குத் தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் தேயிலைப் பயிர்ச்செய்கையாளர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# பொன்சேகாவுக்கு விழுகிறது வெட்டு

கொழும்பு, மே 27

வரவிருக்கும் பொதுத்தேர்தலின்போது ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் அந்தக் கட்சியின் தவிசாளர் பீல்ட்மார்ஷல் சரத்பொன்சேகாவுக்கு வேட்புமனு வழங்கப்படமாட்டாது எனத் தெரியவருகின்றது.

கட்சியிலிருந்து பொன்சேகாவை வெளியேற்றுவதற்கு சஜித் தயாரான நிலையில், நீதிமன்றத்தைநாடி, அதற்கு சஜித்தின் முயற்சிகளுக்குத் தடை உத்தரவை பொன்சேகா பெற்றுக்கொண்டார். அத்துடன், கட்சியால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளையும் பொன்சேகா தொடர்ச்சியாக விமர்சித்து வருகின்றார்.

இந்த நிலையிலேயே, எதிர்வரும் பொதுத்தேர்தலின்போது பொன்சேகாவை முற்றாகப் புறக்கணிக்க சஜித் தீர்மானித்துள்ளார் என்று தெரியவருகின்றது. (ம-44)



# காற்றால் முறிந்த 56 மரங்கள்

கொழும்பு, மே 27

கொழும்பு மாநகர சபைக் குட்பட்ட பகுதிகளில் பலத்த காற்றுக் காரணமாகக் கடந்த 20ஆம் திகதி முதல் 59 மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றன.

பொதுஇடங்கள், வீதிகள் மற்றும் வீடுகளுக்கு அருகில் இருந்த மரங்களே முறிந்து வீழ்ந்துள்ளன.

மரங்களுக்குக் கீழ் வாகனங்களைநிறுத்தும்போது மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்று அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# சொத்து விவரம் கோரல்; வர்த்தமானி வெளியீடு!

கொழும்பு, மே 27

அரச நிறுவனங்கள் உட்பட இலங்கைப் பிரஜைகளின் அசையும் மற்றும் அசையா சொத்துகள் தொடர்பான தகவல்களைஉள்நாட்டுஇறைவரித்திணைக்களத்துக்கு எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் வழங்க வேண்டும் என விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இலங்கைப் பிரஜைகளின் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் வாகன உரிமைப் பரிமாற்றங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் அதிகாரிகள் பயன்படுத்தும் தகவல்களையும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துக்குத் தொடர்ச்சியாக வழங்க வேண்டும் என்று வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# தோட்டத் தொழிலாளருக்கு சட்ட உதவிகளுக்குத் தயார்

### ஐ.தே.க. நடவடிக்கை

கொழும்பு, மே 27

தோட்டத்தொழிலாளர்களின் ஊதிய அதிகரிப்புக்கு எதிராக பெருந்தோட்ட நிறுவனங்கள் நடவடிக்கையில் ஈடுபடும் பட்சத்தில், தொழிலாளர்களுக்கு சட்டஉதவிகள் வழங்கப்படும் என்று ஐ.தே.க. அறிவித்துள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்குத் தற்போது ஆயிரம் ரூபா ஊதியம் வழங்கப்பட்டு வரும் நிலையில், இந்தத் தொகை ஆயிரத்து 350 ரூபாவாக உயர்த்தப்பட வேண்டும் எனவும், விசேட கொடுப்பனவாக 350 ரூபா வழங்கப்படவேண்டும் என்றும், ஆதலால் தோட்டத் தொழிலாளர்களின் தினக் கூலியாக ஆயிரத்து 700 ரூபா வழங்கப்படவேண்டும் என்றும் அரசாங்கம் அண்மையில் அறிவித்தது.

இந்த அறிவிப்பு வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

எனினும், இதற்கெதிராகச் சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ள பெருந்தோட்டக் கம்பனிகள் தயாராகி வருகின்றன என்று தெரிவிக்கப்படும் பின்னணியிலேயே, அவ்வாறான நடவடிக்கைகள் பெருந்தோட்டக் கம்பனிகளால் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் சட்டநடவடிக்கைக்கான உதவிகளை தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் என்று ஐ.தே.க. அறிவித்துள்ளதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

# மரம் முறிந்து பெண் சாவு!

கொழும்பு, மே 27

ஹப்புத்தளையில் மருத்துவமனைக்கு அருகிலுள்ள மரமொன்று முறிந்து வீட்டின் மீது விழுந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் மேலும் இருவர் பலத்த காயமடைந்த நிலையில் தியத்தலாவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை ஹப்புத்தளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

# டயானாவின் தீர்மானங்கள் இரத்துச் செய்யப்படமாட்டா!

### நாடாளுமன்ற அதிகாரிகள் தகவல்

கொழும்பு, மே 27

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் அமைச்சுப்பதவி பறிபோனாலும் அவர் பதவி வகிக்கும்போது அவரால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் எதுவும் இரத்துச் செய்யப்படமாட்டாது என நாடாளுமன்ற அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற துணைப் பொதுச் செயலாளரும் தலைமைச் சட்டத்தரணியுமான சமிந்த குலரத்ன, டயானா கமகே அமைச்சராகப் பதவி வகிக்கும்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் அரசியல் யாப்பின்படி இரத்துச் செய்யப்படமாட்டாது என்று தெரிவித்தார்.

அதேவேளை, டயானா கமகே அமைச்சுப் பதவியை வகித்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஊதியம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் இரத்துச் செய்யப்படுமா அல்லது மீண்டும் வழங்கப்படுமா என்பதை நீதிமன்றமே தீர்மானிக்கும் என நாடாளுமன்ற தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவதற்கு சட்டபூர்வ தகுதி எதுவும் இல்லை என உச்சநீதிமன்றம் கடந்த 8ஆம் திகதி தீர்ப்பளித்தது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு '13'ஐ நடைமுறைப்படுத்துக



## கரு ஜயசூரிய வலியுறுத்து

கொழும்பு, மே 27

**அடுத்த தேர்தலுக்கு முன்னதாக நிலவும் இன மற்றும் மத அவநம்பிக்கையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அரசமைப்பின் '13' ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கத்திடமும் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.**

-இவ்வாறு சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எமது நாடு சுதந்திரம் அடைந்தமைக்கு சிங்களம், தமிழ், முஸ்லிம் மற்றும் பறங்கியர் உட்பட அனைத்து இனத்தலைவர்களின் கூட்டு முயற்சியே காரணமாக இருந்தது.

துரதிர்ஷ்டவசமாக, பிளவுபடுத்தும் இன மற்றும் மத போக்குகள் உட்பட அடுத்தடுத்த நிகழ்ந்தேறிய விடயங்கள் இந்த ஒற்றுமையைச் சிதைத்துவிட்டன.

அனைத்துத் தரப்பினரும் தேசத்தின் நலன்களுக்கு முன்னுரிமை அளிப்பது மற்றும் தீர்வு காண்பதற்கு ஆக்கபூர்வமான உரையாடல்களில் ஈடுபடுவது மிகவும் முக்கியமானதாகும்.

அடுத்த தேர்தலை நாம் நெருங்கும்போது, ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பு உணர்வோடு ஒன்று சேருமாறு கேட்டுக்கொள்கின்றோம். இந்த ஒன்றிணைவானது முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதனூடாக எதிர்கால சந்ததியினருக்கு வளமான இலங்கையை பரிசாக வழங்கமுடியும் - என்றார். (ச-இ)

ஜனாதிபதித் தேர்தல் -

# போட்டியிடுகிறாரா? இல்லையா? அறிவிக்கவேண்டும் ரணில்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாரா? மாட்டாரா? என்பது தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுக்கவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தீர்மானம் ஒன்றை மேற்கொண்டால், ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் தமது கட்சி தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள இலகுவாக இருக்கும்.

தற்போது நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிப்தித் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளார். ரணில் விக்கிரமசிங்கவும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்தால் அமைச்சரவையிலிருந்து இரு வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவர் - என்றார். (எ-இ)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தூய்மையாக்கப்படும்!

## விஜயதாஸ கூறுகின்றார்

கொழும்பு, மே 27

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள ஊழல்வாதிகள் விரட்டியடிக்கப்பட்டு விரைவில் கட்சி தூய்மைப்படுத்தப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஊழல்வாதிகள், மோசடியாளர்கள் விரட்டியடிக்கப்பட்டு, எதிர்காலத்தில் தூய்மையான சுதந்திரக் கட்சி உதயமாகும். அடுத்த தேர்தலில் வெற்றி நடைபோடும் வகையில் கட்சி வழிநடத்தப்படும். அவ்வாறான திட்டம் இல்லாது இருந்திருந்தால் நான் தலைமைப்பதவியை ஏற்றிருக்கமாட்டேன் - என்றார். (எ-44)

# ஸ்ரீலங்கா அமைச்சரவையில் இரட்டிப்பான நியமனங்கள்

இலங்கையில் பதினைந்தாக இருக்கவேண்டிய அமைச்சரவை நியமனங்கள் முப்பதாகக் காணப்படுகின்றன என்று 'வெரிற்றே ரிசேர்ச்' என்ற ஆய்வுநிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது உள்ள அமைச்சுகளின் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைக்கலாம் எனவும், தமக்குச் சார்பானவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கும் அரசாங்கத்தின் கொள்கையால்தான் இவ்வாறு அதிகளவான அமைச்சுகள் ஸ்ரீலங்காவில் குவிக்கப்பட்டுள்ளன என்றும் வெரிற்றே ரிசேர்ச்' கோடுகாட்டியுள்ளது. (ம-6)


## காமினி மாரப்பன காலமானார்

கொழும்பு, மே 27

பிரபல சட்டத்தரணியும் சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணியுமான காமினி மாரப்பன தனது 82ஆவது வயதில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலமானார்.

இவர், கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் தலைவராகவும் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# பிறிதொரு கட்டமைப்புக்குள் ஊழியர் சேமலாப நிதியம்!



## மத்திய வங்கி ஆளுநர் தகவல்

கொழும்பு, மே 27

நிர்வாகச் செயற்பாட்டை சிறப்பாகப் பேணும் வகையிலும் பொறுப்புக்கூறத்தக்க வலுவான கட்டமைப்பாக மாற்றும் வகையிலும் ஊழியர் சேமலாப நிதியத்தை பிறிதொரு கட்டமைப்புக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கி ஊழியர்கள் ஆயிரத்து 200 பேரில் சுமார் 300 பேர் ஊழியர் சேமலாப நிதியத்துடன் தொடர்புடைய பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கடந்த காலங்களில் பங்குகள் மற்றும் பிணைமுறிகளில் மேற்கொள்ளப்பட்ட பொருத்தமற்ற முதலீடுகள் காரணமாக ஊழியர் சேமலாப நிதியத்தின் நிர்வாகச் செயற்பாடுகள் கேள்விக்குள்ளாகின. அந்தவகையில் கொள்கை மற்றும் செயற்பாட்டு ரீதியான சிக்கல்களைக் கருத்திற்கொண்டு, இதன் நிர்வாகத்துக்கென பிறிதொரு கட்டமைப்பு ஸ்தாபிக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் மத்திய வங்கி ஆளுநர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# புதினம் தெரியுமோ?

**போ**னகிழமை வடக்கு - கிழக்கு முழுக்க முள்ளிவாய்க்கால் கஞ்சி குடுபட்டது. முந்தின வருசங்களை விடவும் இந்த வருசம், எங்கட இனத்தை அழிச்ச வேதனையைச் சொல்லுற குறியீடா இருக்கிற இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியை குடுக்கிறது கூடவா இருந்தது. உப்பில்லாக் கஞ்சியைக் குடிச்சுத்தான் அந்த ஊழிக்காலத்தில எங்கட சனம் உயிரைக் கையில பிடிக்கக்கூடியதா இருந்தது. அப்ப உயிரைக் காத்த கஞ்சி, இப்ப அந்த ஊழிக்காலத்தின்ர ஞாபகச் சின்னமா மாறிட்டுது. ஆனால் அதைக்கூட உந்தச் சிங்களவர் நிம்மதியாக் குடிக்கவிடேலை. சண்டை நடக்கேக்க கஞ்சிக்காக லைனில நிண்ட சனத்துக்கு ஷெல் அடிச்சும், பிளேனால குண்டுபோட்டும் சாகடிச்சாங்கள். இப்ப என்னடாவெண்டால் சுகாதாரச் சீர்கேடு, நல்லிணக்கத்துக்கு குந்தகம் எண்டு என்னென்னவோ சாட்டுகளைச் சொல்லி, முள்ளிவாய்க்கால் கஞ்சிக்கு முட்டுக்கட்டை போடுறாங்கள். அதையும் மீறி முள்ளிவாய்க்கால் கஞ்சி குடுத்த பொம்பிளையளை, இரவில வீடு புகுந்து பொலிஸ் பிடிக்கிற அநியாயங்கள் எல்லாம் இந்தமுறை நடந்தது. வாற வருசத்தில இருந்து இலங்கையில தடை செய்யப்பட்ட பொருளா முள்ளிவாய்க்கால் கஞ்சியை அறிவிச்சாலும் ஆச்சரியமில்லை. கஞ்சா, ஹெரோய்னைப் பிடிக்கிறதைவிடவும் முள்ளிவாய்க்கால் கஞ்சி குடுத்த ஆக்களைப் பிடிக்கிறதிலதான் பொலிஸ்காரரும் ஆமியும் முழுமூச்சா நிண்டவை.

இப்பிடியெல்லாம் எங்கட இனத்தையும், முள்ளிவாய்க்கால் கஞ்சியையும் போனகிழமை அலைக்கழிச்சு, ஆய்க்கினை பண்ணின அதே பொலிஸ்காரரும், ஆமிக்காரரும் இந்தக்கிழமை தங்கட வெசாக்குக்கு எல்லா இடத்திலையும் 'தன்சல்' எண்டு சொல்லுற தானம் குடுத்தவை. சோறு கறி, ரொட்டி, பாண், பணிஸ், தேத்தண்ணி, கூல் ட்ரிங்ஸ், அவிச்ச மரவள்ளிக்கிழங்கு, ஐஸ்கிறீம் எண்டு ஒவ்வொரு இடத்திலையும் ஒவ்வொரு விதமான 'தன்சல்'. எங்கட தமிழ்ச் சனம் 'ஒரு மயிர் நீப்பின் உயிர்வாழாக் கவரிமான்' பரம்பரையில வந்ததால, முள்ளிவாய்க்கால் கஞ்சியை தட்டி விழுத்தின பொலிஸ் காரரின்ர தன்சலை எட்டியும் பாராது எண்டுதான் எல்லாரும் நினைச்சம். ஆனால் நல்லூர்த்திருவிழா மாதிரி எல்லா 'தன்சல்' வாசலிலையும் பெரும் கியூ. அதுக் குள்ள லைனைக் குழப்பினதெண்டு அடிபாடுவேற. இப்பிடி இடிச்சுப் பிடிச்சுப் போய், ஆமியிட்டையும், பொலி ஸிட்டையும் பல்லைக்காட்டி, கையைநீட்டி ஏதோ பாணுக்கும், பருப்புக்கும் வழியில்லாதவைபோல வாங்கிக் கொண்டு போயிருக்குதுகள் எங்கட சனங்கள்.

இப்பத்தைப் பொருளாதார நெருக்கடியில கஷ்டப்பட்ட சனங்கள், பசியை ஆத்துறதுக்கு இப்பிடி ஆமி, பொலிஸ் குடுத்த தானத்தை வாங்கினால்கூட ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் உந்த 'தன்சல்'களுக்கு முன்னால காரிலையும், ஏசிபோட்ட வாகனங்களிலையும் வந்த ஆக்கள்தான்கூட. அப்பிடி வந்தவை தான் முண்டியடிச்சுக்கொண்டு, உந்த தானத்தை வாங்கி, காருக்குள்ள அடுக்கிவைச்சுக்கொண்டுபோனவை. முள்ளிவாய்க்கால் கஞ்சி குடிச்ச ஈரம் கூடக் காயாமல் எப்பிடித்தான் இப்பிடி எங்களுக்கு அப்பவும், இப்பவும் கொள்ளிவைக்கிறவனிட்ட போய் கையேந்துகினமோ தெரியேலை.

சிலவேளை மஹாகவி இப்ப உயிரோட இருந்திருந்தால் இப்பிடித்தான் கவிதை எழுதியிருப்பார் கண்டியளோ.

'முந்தநாள் முள்ளிவாய்க்கால் கஞ்சியை
கொடுத்தவனின் சுற்றம் அந்தோ
தன்சல் வாசலில் தவண்டடிக்கிறது.'

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
14.12.1947

மறைவு
26.05.2024

## துரைச்சாமி சுந்தரலிங்கம்

**(பிரபல வர்த்தகர்-ஸ்ரீரங்கன் ரேடிங் கம்பனி-4ம் குறுக்குத்தெரு-கொழும்பு-11)**

புங்குடுதீவு 6ம் வட்டாரம் இறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட துரைச்சாமி சுந்தரலிங்கம் அவர்கள் 26.05.2024 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி-ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு-புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் அகிலன் (பல்வைத்தியர்), சுதர்சன் (UK), சர்மிளா, சற்சொரூபன் (UK) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் துவாரகா (HNB), கார்த்திகா (வைத்தியர் UK), நிமலன் (Quantity Surveyor), சோபனா (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும் சேரன், மித்திரன், தாமரா, சர்வின், விவான், அதிரா, ஹர்ஷனா, அஷ்வித் ஆகியோரின் அன்புப் பேரனும் நாகபூசணி (ஆசிரியர்), கணேசலிங்கம் (ஜேர்மனி) காலஞ்சென்றவர்களான சிவபூசணி, முத்துலிங்கம், சுபாஸ்கரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கமலரஞ்சனி (ஜேர்மனி), சிவனேஸ்வரன் (பிரான்ஸ்) காலஞ்சென்றவர்களான கிருஷ்ணன், குலசிங்கம் மற்றும் இராஜேஸ்வரி, சரோஜினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை 28.05.2024 அன்று அன்னாரது இல்லத்தில் 09.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் 11.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**129, அரசடி வீதி
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
மனைவி, மக்கள்
மருமக்கள்.**

(CS 591) V-1


# 10 ஆண்டுகளின் பின்னர் கொல்கத்தா சம்பியன்

**ஐ.பி.எல். இறுதியாட்ட வரலாற்றில் மிக மோசமான ஆட்டமாக நேற்றைய இறுதியாட்டம் அமைந்தது.**



இந்த ஆட்டத்தில் சன்ரைஸஸ் அணியை 8 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி சம்பியனானது கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி. இதன் மூலம் அந்த அணி 2014ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல் தடவையாக சம்பியனாகியுள்ளது. நேற்றைய வெற்றியுடன் அந்த அணி இதுவரை மூன்று தடவைகள் கிண்ணத்தை வென்ற அணியாகியது.

நேற்றைய இறுதி ஆட்டம் சென்னையில் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சன்ரைஸஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதுவே அந்த அணிக்கு பாதகமாகியது. நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களைக் கூட தாக்குப்பிடிக்க முடியாமல் 18.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 113 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் கம்மின்ஸ் 19 பந்துகளில் 24 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் ரசல் 3 இலக்குகளையும், ஸ்ராக் மற்றும் ரானா தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். பதிலளித்து ஆடத் தொடங்கிய கொல்கத்தா வழமைபோன்று அதிரடியில் தொடங்கியது. நரைன் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும், குர்பாஸ், வெங்கடேஸ் ஐயர் ஆட்டத்தில் இலகுவான வெற்றியை நோக்கி நகர்ந்தது. குர்பாஸ் 39 ஓட்டங்களுடன் வெளியேறியபோதும் கொல்கத்தாவின் வெற்றியை அது பாதிக்கவில்லை. வெங்கடேஸ் ஐயர் 26 பந்துகளில் 52 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத்தார். 10.3 பந்து பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது கொல்கத்தா. ஆட்டநாயகனாக மிட்செல் ஸ்டார்க் தெரிவானார்.

(ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




# சவக்குழிகளில் அவதானம்!!

சமூக ஊடகங்கள் பலவும், மனித மூளையில் சுரக்கும் 'டொபொமைன்' போன்ற சுரப்பிகளை அதிகம் சுரக்கச் செய்யும் வகையில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளன என்று எச்சரித்திருக்கின்றார் உலகப் பணக்காரரும், எக்ஸ் தளத்தின் (முன்பு ருவிற்றர்) உரிமையாளருமான எலான் மஸ்க். இது மனித இயல்நிலைக்கு அப்பாற்பட்டது என்பதுடன், இவ்வாறான பேராபத்துகளில் இருந்து நாம் குழந்தைகளைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும், சமூக வலைத்தளங்களில் இருந்து குழந்தைகளை தொலைவாக வைத்திருக்கவேண்டும் எனவும் மஸ்க் அறிவுறுத்தியுள்ளார். நவீன உலகின் மாணவர்களும் பொதுமக்களும் திறன் அலைபேசிகளுடனும், தொடுதிரைகளுடனும் தங்களின் வாழ்க்கையைத் தொலைத்துக் கொண்டிருக்கின்ற நிலையில், எலான் மஸ்க்கின் இந்த அறிவிப்பு காலத் தேவையானது. அதிலும், மஸ்க் தளத்தின் உரிமையாளராக இருந்துகொண்டே சமூக வலைத்தளம் தொடர்பில் அவர் தெரிவித்திருக்கும் இந்தக் கருத்தில் இரண்டாம் நிலைநின்று விவாதிப்பதற்கோ அல்லது வர்த்தகச் சாயம் பூசிவிடுவதற்கோ ஒன்றுமில்லை. எலான் மஸ்க் வெளிப்படுத்தியிருக்கும் வார்த்தைகளின் தாக்கத்தையும், தாற்பரியத்தையும் சிரத்தையில் ஏற்றி சிந்திப்பதற்குப் பலநூறு விடயங்கள் இருக்கவே செய்கின்றன.

இன்றைய உலகில் திறன் அலைபேசிகளும், தொடுதிரைகளும், சமூக வலைத்தளங்களும் ஆக்கிரமிக்காத இடங்களே இல்லை. இதனால், அவற்றை அணுகுவதும் பழக்கப்படுவதும், காலப்போக்கில் அவற்றுக்கு அடிமையாகிவிடுவதும் மிகச்சாதாரண நிகழ்வுகளாக இன்று மாறிவிட்டன, இதனால் நன்மைகள் இல்லாமலில்லை. வர்த்தகம், கல்வி, தொடர்பாடல் போன்ற துறைகளில் சமூகவலைத்தளங்களும் தொடுதிரைகளும் இன்று தவிர்க்கப்பட முடியாத சக்திகள். ஆனால், எவ்வளவுக்கெவ்வளவு மனித குலம் இவற்றை நெருங்கி நெருங்கிச் செல்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு 'மீண்டும் இணைக்கப்பட முடியாத' இடைவெளி எமக்குள் வேர்விட்டு வளரவே செய்கின்றது. பிள்ளைகளின் கற்றலுக்கு தொடுதிரைகளும், வலைத்தளங்களும் உதவுவதை விடவும் கலாசாரச் சீரழிவையே அவை அதிகம் ஏற்படுத்துகின்றன. போதைப் பொருளுக்கு அடிமையாகும் பாடசாலைச் சிறுவர்களின் வாழ்வைச் சிதைப்பதில் எங்கோ ஓரிடத்தில் தொடுதிரை தொடர்புற்றிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில், உலக வர்த்தகத்தின் பெரும் புள்ளியான மஸ்க், தன் சொந்த நிறுவனமான 'ருவிற்றரையே' பாதிக்கக்கூடிய ஒரு அறிவிப்பை, மனித குலத்தின் நன்மைக்காக விடுத்திருக்கின்றார் என்றால், அதிலிருந்தே நாங்கள் இந்த சமூக வலைத்தளங்களின் தாக்கத்தையும் ஆபத்தையும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

அன்றைய காலத்தில் இருந்த கற்றல் - கற்பித்தல் முறைகள் இன்றில்லை. இன்றைய உலகம் தொடுதிரைக் கற்கையை முன்னிலைப்படுத்திய ஒன்றே. ஆதலால், இன்று தொடுதிரைகளும் - திறன் அலைபேசிகளும் தவிர்க்கமுடியாதவை என்று இந்த 'நவீனத்துவப் பிறழ்வுக்கு' நாம் காரணம் சொல்லலாம். ஆனால், அவ்வாறாக நாம் அடுக்கும் காரணங்கள் எங்களை நாங்களே ஏமாற்றும் செயலே அன்றி வேறில்லை. மாணவர்களிடம் இன்று திறன் அலைபேசிகள் இருக்கவேண்டும்தான். ஆனால், அவற்றின் மீதான கண்காணிப்பை பெற்றோரும், பாதுகாவலர்களும் இறுக்கமாகக் கொண்டிருக்கவேண்டும். மாணவர்களை தொடுதிரைகளில் இருந்தும் சமூக வலைத்தளங்களில் இருந்தும் தூரவைப்பதற்கு முடியுமான அத்தனை நடவடிக்கைகளையும் அரசாங்கம் கொள்கையளவில் மேற்கொள்ளவேண்டும்...!





# மக்கள் கருத்தை அறியும் திட்டம் அரசுக்கில்லை!

## பந்துல தெரிவிப்பு

**கொழும்பு, மே 27**

**ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்காக மக்கள் கருத்துக்கணிப்பு பெறப்படவுள்ளது என்று கூறப்படும் தகவல் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

நாட்டில் முதலில் ஜனாதிபதித் தேர்தலே இடம்பெறவுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

இந்தவருடம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டு, அதன்பின்னரே பொதுத்தேர்தல் நடத்தப்படும்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்காக மக்கள் கருத்துக்கணிப்பு பெறப்படவுள்ளது என்று கூறப்படும் தகவல் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது.

அவ்வாறான எந்தவொரு தேவையும் அரசாங்கத்துக்குக் கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# சிறுவர் வன்கொடுமைகள் மேல்மாகாணத்தில் உயர்வு

கொழும்பு, மே 27

மேல், வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில், ஏனைய மாகாணங்களைவிட அதிகளவில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகி வருகின்றன என்று தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் தெரி வித்துள்ளது. இவ்வாண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வரையில் 1,181 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனம்

கொழும்பு, மே 27

நேற்றுமுதல் நாட்டில் டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலையால் டெங்கு நோய்ப் பரவும் விகிதம் அதிகரித்துள்ளதை அடுத்தே டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. (எ-இ)

# மருந்தாளர்கள் பற்றாக்குறை

கொழும்பு, மே 27

இலங்கையின் அரச சுகாதார அமைப்புக்குள் சுமார் 2 ஆயிரம் மருந்தாளர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று அரச மருந்தாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதனால் தற்போது ஏற்பட்டுள்ள வெற்றிடங்கள் காரணமாக சுகாதாரத்துறையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# 'அஸ்வெசும' 2ஆம் கட்டம் வடக்கிலிருந்து

கொழும்பு, மே 27

'அஸ்வெசும' இரண்டாம் கட்டத்தை வடமாகாணத்தில் ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தற்போது இரண்டாம் கட்ட விண்ணப்பங்கள் அனுப்பியவர்களின் தகவல்களைச் சரி பார்ப்பது போன்ற நடவடிக்கைகளிலிருந்து கிராம அலுவலர்கள் விலகி, தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஆயினும் வடக்கு மாகாணம் உறுதுணையாக இருந்தமையால் வடமாகாணத்தில் இரண்டாம் கட்ட நிவாரணப்பணிகளை ஆரம்பிப்பது தொடர்பில் நிதியமைச்சு கவனம் செலுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## நாளை

28.05.2024

**செவ்வாய்க்கிழமை**

வைகாசி - 15

சுபநேரம் : 10.22 - 11.52

ராகுகாலம் : 02.52 - 04.22

அக்கினி நாள் முடிவு

## நாளொரு நல்வார்த்தை

**நான் சந்திக்கும் ஒவ்வொருவரும் ஏதோவொரு வகையில் என்னைவிட உயர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள்.**

**- எமர்சன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடைமையில் கசிப்பு மூவர் கைது



யாழ்ப்பாணம், மே 27

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நீர்வேலிப் பகுதியில் இளைஞர் ஒருவரை கோப்பாய் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர்.

நீர்வேலிப் பகுதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது 4 லீற்றர் கசிப்புடன் 28 வயதான குறித்த இளைஞர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவருக்கு எதிராக யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

* * *

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மானிப்பாய் பொலிஸாரால் குடும்பஸ்தர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலுக்கமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்புடன் சந்தேகநபரைக் கைதுசெய்துள்ளனர். உரும்பிராய் தெற்கு, செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த 43 வயதான நபரே இவ்வாறு கைதுசெய்யயப்பட்டுள்ளார்.

சந்தேகநபருக்கெதிராக யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

* * *

1500 மில்லிலீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில், இளைஞர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பகுதியைச்சேர்ந்த 30 வயதான இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட நபரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப-25-125)

## இரு விபத்துகளில் மூவருக்குக் காயம்




சாவகச்சேரி மே 27

மிருசுவில் ஏ-9 வீதியில் பேருந்திலிருந்து தவறி விழுந்த இளைஞனும், மீசாலை ஏ-9 வீதியில் ஓட்டோவுடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் காயமடைந்த இருவரும் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவங்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றன.

மீசாலையிலுள்ள ஒழுங்கையிலிருந்து ஏ-9 வீதிக்கு நுழைந்த மோட்டார் சைக்கிளை எதிரே வேகமாக வந்த ஓட்டோ மோதியது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்துள்ளனர். இவர்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். மிருசுவில் பகுதியில் பேருந்துத் தரிப்பிடத்தில் நிறுத்துவதற்கு முன்னர் பேருந்திலிருந்து இறங்கிய இளைஞர் தரையில் வீழ்ந்து, தலையில் பலத்த காயமடைந்த நிலையில் கொடிகாமம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ப-9)



## கரையொதுங்கியது ஆளில்லாப்படகு

மன்னார், மே 27

மன்னார் பொலிஸ் பிரிவிலுள்ள சௌத்பார் கடற்கரைப் பகுதியில், ஆள்கள் இல்லாத நிலையில் மீன்பிடிப் படகு ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை கரை ஒதுங்கியுள்ளது.

படகில் வெளி இணைப்பு இயந்திரம் பொருத்தப்பட்ட நிலையில், படகினுள் மீன்பிடி வலைகள் மற்றும் மீன்களும் காணப்பட்டன.

சௌத்பார் கடற்படையினர் இந்தப் படகை மீட்டுள்ளதோடு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ப-56)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 27

புங்குடுதீவு மேற்கு, தையிட்டி – பெரியபுலம் அருள்மிகு ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் ஜூன் மாதம் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 8ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன என்று ஆலய பரிபாலனசபை தெரிவித்துள்ளது. (ச)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். திடீர் பணவரவு மகிழ்ச்சி தரும். செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மனஸ்தாபம் நீங்கும்.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தொல்லைகள் நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகாலட்சுமியை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். செலவுகள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை எதிர்பார்த்ததைவிடவும் குறைவாகத்தான் இருக்கும். விநாயகரை வழிபடுவது நலம் சேர்க்கும்.

**கடகம்:** காரியம் இழுபறியாக முடியும். காரியங்களில் வெற்றியும் உண்டாகும். உடல் அசதி உண்டாகும். விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுவதுடன் இலாபமும் கூடுதலாகக் கிடைக்கும். முருகப்பெருமானை வழிபடுவது நன்று.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். வார்த்தைகளில் நிதானம் அவசியம். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடிந்துவிடும். மனதில் அவ்வப்போது குழப்பம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். செலவு செய்ய வேண்டி வரும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள்.

**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். உறவுகளுக்காக செலவு செய்ய வேண்டி வரும். மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக்கொள்வார். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவைப்படும். செலவுகளால் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். சில சங்கடங்களும் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு இழுபறியானாலும் சாதகமாக முடியும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் சற்று அலைச்சலும் சோர்வும் உண்டாகும்.

## மரக்கறி விலை உயர்வு



சாவகச்சேரி, மே 27

தென்மராட்சிப் பிரதேச சந்தைகளில் மரக்கறிகளின் விலை நாளுக்குநாள் அதிகரித்துவருகிறது. அண்மையில் பெய்த கடும் மழையின் பின்னர் சந்தைகளுக்குக் கொண்டு வரப்படும் மரக்கறிகளின் அளவு குறைந்துள்ளதால் அவற்றின் விலை உயர்வடைந்துள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர்.

கத்தரிக்காய் கிலோ 160 ரூபாவாகவும், தக்காளிப்பழம் 300 ரூபாவாகவும், பச்சைமிளகாய் 150 ரூபாவாகவும், வெண்டைக்காய் 150 ரூபாவாகவும், பயிற்றங்காய் 300 ரூபாவாகவும், முருங்கைக்காய் ஆயிரம் ரூபாவாகவும், பீற்றூட் 600 ரூபாவாகவும், கரட் 220 ரூபாவாகவும், கோவா 200 ரூபாவாகவும், கீரை ஒரு பிடி 150 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. (எ-25-9)

## சட்டவிரோத சாராயம் சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், மே 27

அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்பனை செய்த குற்றச்சாட்டில் மானிப்பாய் பொலிஸாரால் கடந்த வெள்ளிக்கிழமை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் ஆலடி, உடுவில் பகுதியில் வீடொன்றில் வைத்து சாராயத்தை விற்பனை செய்வதாக மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைவாக அங்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபரான ஒருவரைக் கைதுசெய்தனர்.

அவருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது (எ-25-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





'போதைப் பொருளைப் புறக்கணித்து இயற்கையின் பசுமை பேணுவோம்' எனும் தொனிப் பொருளில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், வடக்கில் வருடாந்தம் முன்னெடுக்கப்பட்டு வரும் விழிப்புணர்வு மரதன் ஓட்டப் போட்டி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மன்னாரில் இடம்பெற்றது. (ப-56)



யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோகசுவாமிகள், குருதேவர் சிவாய சுப்பிரமுனியசுவாமிகளுக்குத் தீட்சை வழங்கி, 75 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு, யோகர் சுவாமிகளின் கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன. அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தில் பிரதிஷ்டை செய்வதற்கென ஹாவாய் சைவ ஆதீனத்தால் அனுப்பி வைக்கப்பட்ட குருதேவரின் திருவுருவத்துக்கு திருவடி அபிஷேகத்தோடு, குருதேவருக்கும் விசேட அபிஷேக பூசைகள் நடைபெற்றன. (ப-125)



க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சிறப்பான சித்தியைப் பெற்ற மாணவியொருவருக்கு சைக்கிள் ஒன்று அண்மையில் வழங்கப்பட்டது. கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும், குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தினூடாக, லண்டன் வாழ் பூதம்பிள்ளை சோதிநாதனின் பிறந்தநாளை முன்னிட்டு, சோதிநாதனின் நிதிப் பங்களிப்பில் சைக்கிள் வழங்கப்பட்டது. (ப-66)




வட்டுக்கோட்டை 'கொற்கைத்துறை' இந்து மயான நுழைவாயில் வளைவுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு வலி.மேற்கு பிரதேச செயலர் திருமதி கவிதா உதயகுமார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (ப)


கோப்பாயில் அமைக்கப்பட்ட அம்மாச்சி பாரம்பரிய உணவகத் திறப்பு விழாவும், பொருளாதாரம் நலிந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு சபை நிதி மூலம் தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்வும், கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றன. செயலாளர் இ.பகீரதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்துகொண்டார். (ப-9)







வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 18வயது ஆண்கள் பிரிவுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி முதலிடம் பெற்று சம்பியன் பெற்றுள்ளது. இரண்டாம் இடத்தை வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரியும், மூன்றாம் இடத்தை அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன. (ச-555)



முல்லைத்தீவு மாவட்ட 59ஆவது இராணுவப் படைப் பிரிவினரின் ஏற்பாட்டில் வெசாக் பண்டிகை நிகழ்வு புதுக்குடியிருப்பு பிரதேச சபை விளையாட்டு மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ம-25-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி வேட்பாளர்கள் அமைச்சரவையில் உள்ளனர்

## நாமல் அறிவிப்பு

**கொழும்பு, மே 27**

**பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர்கள் தற்போதைய அமைச்சரவையிலேயே உள்ளனர் என்று பெரமுனவின் முக்கியஸ்தர்களில் ஒருவரான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.**

ஜனாதிபதித் தேர்தலுக்கான தீவிர பரப்புகைகளை பிரதான எதிர்க் கட்சிகளாக ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி.யினர் முன்னெடுத்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலைக் களமிறக்குவதென உறுதிப்படுத்தியுள்ளது. ஆனால், தனியான வேட்பாளரைக் களமிறக்குவதா? அல்லது ரணிலை ஆதரித்து அவரைப் பொதுவேட்பாளராக்குவதா? என்பது தொடர்பில் பெரமுன இன்னமும் தீர்க்கமான முடிவெடுக்க வில்லை.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே, தற்போதைய அமைச்சரவையில்தான் பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர்கள் உள்ளனர் என்றும் அவர்களில் ஒருவரை வேட்பாளராகக் களமிறக்குவோம் எனவும் நாமல் தெரிவித்துள் ளார். ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பேச்சு நடத்தப்பட்டுவருகின்றது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் பெரமுனவின் வேட்பாளர் தொடர்பான அறிவிப்பு உரிய வகையில் வெளியாகும். தற்போதைய அமைச்சரவையிலேயே இரு வேட்பாளர்கள் இருக்கின்றனர்.

எமது கட்சியின் கொள்கையை ஏற்கக்கூடிய, அடிப்படைக் காரணிகளைப் பாதுகாக்கக்கூடிய, ஒற்றையாட்சியைப் பாதுகாக்கக்கூடிய நபரையே நாம் வேட்பாளராகப் பெயரிடுவோம். குறுகிய நோக்கில் அல்ல தூரநோக்கு சிந்தனையின் அடிப்படையிலேயே எமது முடிவு அமையும் என்று நாமல் ராஜபக்ச மேலும் தெரிவித்தார். (ம-44)

# ஜனாதிபதித் தேர்தல்; மௌனிப்பது எதற்கு?

## ரணில் சொன்ன விளக்கம்

கொழும்பு, மே 27

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கவுள்ளதை முன்கூட்டியே அறிவித்துவிட்டால், அது அபிவிருத்திப் பணிகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதாலேயே மௌனம் காத்துவருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் சிலருடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார் என கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேவேளை, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் கொழும்பில் இரகசிய சந்திப்பொன்றும் இடம்பெற்றுள்ளது. அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் இதில் பங்கேற்றுள்ளனர். ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு திரட்டும் வகையிலேயே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.


இதில் பங்கேற்றிருந்தவர்கள் "ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதை ரணில் எங்களிடமாவது உறுதிப்படுத்தவேண்டும் என்று ஜனாதிபதியிடம் எடுத்துரையுங்கள்" என்று பிரசன்ன ரணதுங்கவிடம் கூறியுள்ளனர். இதன்போதே, பிரசன்ன ரணதுங்க, ஜனாதிபதி கூறிய மேற்படி விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-44)

# ஹெரோய்ன் விற்பனை; கலால் அதிகாரி கைது

அலவத்துகொடவில் ஹெரோய்ன் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர் உட்பட 5 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெரோய்ன் விற்பனையில் ஈடுபட்ட நபரொருவரைக் கைதுசெய்து அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு கலால் தலைமை அலுவலகத்தில் கடமையாற்றும் கலால் அதிகாரியே கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் அவரிடமிருந்து ஹெரோய்ன் போதைப்பொருள், டிஜிற்றல் தராசு மற்றும் பணம் என்பன மீட்கப்பட் டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், வாராந்த நிகழ்வு, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கனின் பக்தி இன்னிசை நிகழ்வு நடைபெற்றது. தொடர்ந்து பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட சக்கோட்டைக் கிராமத்தைச் சேர்ந்த குடும்பமொன்றின் வாழ்வாதார தேவை கருதி,சைக்கிள் ஒன்றும் வழங்கப்பட்டது. (ப-66)



யாழ். மாநகரசபையின் அனுசரணையுடன், போதனா மருத்துவமனைக்கு முன்பாக, மருத்துவமனை நிர்வாகத்தி னரால் 24 மரக்கன்றுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடப்பட்டன. (ப-125)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் : 12.07.1947 மறைவு : 29.04.2024

கடந்த 29.04.2024 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**கந்தையா செல்வரத்தினம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளைமறுதினம் (29.05.2024) புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்செய்தியறிந்தவுடன் நேரிலும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், பதாகைகள், மலர்வளையங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டவர்களுக்கும் இன்று வரை எமக்கு பல வழிகளில் உதவிபுரிந்த நல்லுள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**உசன் மிருசுவில்**

(cr.42582 (N-1)

**குடும்பத்தினர்**


# ஆசிரியநியமனத்துக்கான விண்ணப்பம் கோரப்படும்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

ஆசிரிய நியமனங்களுக்கான விண்ணப்பங்கள் மீண்டும் கோரப்படவுள்ளன என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் 356 பட்டதாரிகளுக்கு நேற்றுமுன்தினம் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன. அந்த நிகழ்வில் உரையாற்றியபோதே வடக்கு ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஆசிரியர் பதவிக்கான போட்டிப் பரீட்சையில் 3 ஆயிரம் பேர் தோற்றியிருந்தபோதும், புள்ளிகள் அடிப்படையில் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் தெரிவுசெய்யப்பட்ட 356 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இன்னும் இரண்டு வாரங்களில் மீண்டும் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு, எஞ்சிய வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டதாரி...

பதி ரணிலின் தலைமையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மல்லாவி நீர்வழங்கும் திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் ஊடாக 40 ஆயிரம் குடும்பங்கள் நன்மை அடையும். பொருளாதார நெருக்கடி நிலையிலும் உலக வங்கியுடனான ஒப்பந்தம் செய்து இதனை ஆரம்பிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார்.

வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் என்பவற்றினால் 1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உள்வாங்கப்பட்ட 50 ஆயிரம் காணிகளை விடுவிக்கவும் அனுமதி கிடைத்துள்ளது.

இங்குள்ள மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி ஒவ்வொரு நாளும் எடுத்து வருகிறார். யாழ். மாவட்டத்திலுள்ள பல முக்கியமான இடங்களை சுற்றுலா மையங்களாக மாற்றவும் ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடமாகாணத்தில் செலவிடும் மூன்றாவது நாள் இன்று. இந்த மூன்று நாட்களாக வடமாகாணத்துக்குப் பயணம் செய்து மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நேரில் கண்டு அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார். (அ-ஒ-5-26)

## களவாடப்பட்ட...

செல்வதால் திருடர்கள் அவற்றைத் திருடிச் சென்று சூட்சுமமான முறையில் அவை மறைக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரையில் யாழ். நகரப் பகுதியில் 32 மோட்டார் சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் குறிப்பிட்ட நேரங்களுக்குள்ளேயே இல்லாது போகின்றன. அவை பின்னர் உதிரிப்பாகங்களாகப் பிரிக்கப்பட்டு விற்கப்படுகின்றனவா என்ற சந்தேகமும் வெளியிடப்பட்டுள்ளது.

இதுவரை இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லை. (அ-ஒ-26)

## மாணவிகளுடன்...

தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவிகளுடன் தவறாக நடந்ததாகத் தெரிவிக்கப்படும் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 7 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கலவன் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர், 5 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவி ஒருவருடன் தவறான நடத்தையில் ஈடுபட்டதாகத் தெரிவித்து மாணவியின் தந்தையால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில், இவ்வாறான தவறான நடத்தையில் ஆசிரியர் ஈடுபட்டதாக வேறு சில மாணவிகளும் வாக்குமூலம் வழங்கியிருந்தனர். இதனையடுத்து மானிப்பாய் பொலிஸாரால் ஆசிரியர் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 7 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஒ-125)

## இனத்தின்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ் மக்களால் ஒற்றுமையாக தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த முடியாது எனத் தெரிவித்துள்ளமை தொடர்பில் தமிழ்த் தலைவர்களிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பில் நாம் அனைவரும் இன்னமும் ஒன்று கூடிப் பேசவில்லை. நாம் விரைவில் கூடிப் பேசித் தீர்மானிப்போம். ரணில் அப்படித் தெரிவிக்கமுடியாது. இனத்தின் விடுதலைக்காக ஒரே நிலைப்பாட்டில் நாம் தீர்மானத்தை எடுப்போம். நீதிமன்ற வழக்குகளின் திகதிகளின் நிமித்தம் எம்மால் கூட முடியாதுள்ளது. இருப்பினும் வெகுவிரைவில் தீர்மானத்தை நாம் எடுப்போம் - என்றார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வழங்குவதற்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வேட்பாளர்கள் எவரும் தயாரில்லை. சிங்களத் தலைவர்கள் ஈழத்தமிழர்களை எடுப்பார் கைப்பிள்ளைகளாகப் பயன்படுத்த நினைக்கும் மனோநிலையிலிருந்து வெளிவராத வரை இந்த நாட்டில் இன நல்லிணக்கம், சமத்துவம், சகோதரத்துவம் என்பவற்றுக்கு சாத்தியமேயில்லை - என்றார்.

ரெலோ அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், ரணில் விக்கிரமசிங்க, விக்னேஸ்வரனிடம் கூறிய கருத்து எம்மைத் தலைகுனிய வைக்கின்ற பேச்சாகக் கருதுகின்றேன். எங்களுடைய பலவீனத்தை இது எடுத்துக் காட்டுகின்றது. நாம் ஒற்றுமையாக நிற்பதற்கான செயற்பாடுகளைச் செய்தே தீரவேண்டும். ஒற்றுமையில்லாமல் நாம் இருப்பதனால் எம்மை மலினப்படுத்துகின்றார். தென்னிலங்கை எப்பொழுதும் பிரித்தாளும் தந்திரத்தையே கையாளுகின்றது. இதனாலேயே இவ்வாறான கருத்து வருகின்றது. எங்களைப் பொறுத்தவரை எமக்கு இது சவாலான விடயம். இதனை நாம் ஒற்றுமையாக நின்று செய்து காட்டுவோம் - என்றார்.

புளொட் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், தமிழ் மக்களுக்குள்ளே ஒற்றுமை இல்லை என்பது மிக நீண்டகாலமாக இருக்கின்ற ஒரு பிரச்சினை. தமிழ் மக்களிடையே ஒற்றுமையைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் நாங்கள் வெற்றியடைவோம். இது அனைத்துக்கும் முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒற்றுமையைக் கதைத்துவிட்டு இங்கு வந்து எம்மைப் பற்றி பேசட்டும். ஒற்றுமையில்லாமல் இருப்பது சாபக்கேடுதான். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனைக் கதைப்பதற்கு தகுதியற்றவர். முதலில் தனது உட்கட்சி பிரச்சினையை முடித்துவிட்டு இங்கே வரட்டும் - என்றார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், சஜித் பிரேமதாஸ, அநுர, ரணில் போன்ற தகுதி வாய்ந்த பலர் வேட்பாளராவதற்கு தமிழ் மக்களிடமும் தாராளமாக உள்ளார்கள். தமிழ் மக்களிடம் வேட்பாளர்கள் உள்ளார்களா என ரணில் கேட்டது தமிழ் மக்களை கேலிக்கு உள்ளாக்கும் செயலாகும் - என்றார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ், ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தேவையாக இருப்பது தமிழ் மக்கள் சார்பில் ஒரு பொதுவேட்பாளரை நிறுத்தவேண்டும் என்பதுதான். தமிழ் மக்களது வாக்குகள் இம்முறை தனக்குக் கிடைக்கப்போவதில்லை என ரணிலுக்குத் தெளிவாகத் தெரியும். தனக்குக் கிடைக்காத தமிழ் வாக்குகள் தனது போட்டியாளராக வரக்கூடிய சிங்கள வேட்பாளருக்கும் கிடைக்கக்கூடாது. எனவே தமிழ் மக்களைச் சீண்டும் வகையில், உங்களால் ஒற்றுமையாக பொது வேட்பாளரை நிறுத்தமுடியாது என்று சொல்வதன் ஊடாக தமிழ் மக்கள் நிச்சயம் பொதுவேட்பாளரை நிறுத்துவார்கள். அதுதான் ரணிலுக்குத் தேவை. இது ரணில் - விக்னேஸ்வரன் கூட்டு நாடகம் - என்றார். (அ-ஒ-5-125)

## முன்பள்ளி...

வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகை தந்த நிலையில், முன்பள்ளி ஆசிரியர்கள் ஜனாதிபதியைச் சந்தித்து மனுவைக் கையளித்து தமது பிரச்சினை தொடர்பில் கருத்துத் தெரிவிக்க முயற்சித்தனர்.

இருப்பினும், முன்பள்ளி ஆசிரியர்கள் உள்ளே சென்று ஜனாதிபதியைச் சந்திக்க அனுமதி வழங்கப்படவில்லை. இதனையடுத்து தமது மனுவை கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஊடாக ஜனாதிபதிக்குக் கையளித்தனர்.

இதன்பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த முன்பள்ளி ஆசிரியர்கள், எமக்கான உதவிக் கொடுப்பனவு 6 ஆயிரம் ரூபாமட்டுமே. தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இது போதாது. மாதசம்பளம் 60 ஆயிரத்துக்கு மேல் பெறுபவர்களே தமது குடும்பத்தைக் கொண்டு நடத்தமுடியாது கஷ்டப்படுகின்றனர்.

எமக்கான சம்பளங்கள் அதிகரிக்கப்படுவதுடன், ஏனைய அரச சேவை போல் முன்பள்ளி ஆசிரியர்களையும் நிரந்தமாக அரசாங்க சேவைக்குள் உள்வாங்கவேண்டும். பல முன்பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் இல்லை. அவை மேம்படுத்தப்பட வேண்டும்.

முன்பள்ளிகளையும் கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வந்து அரச கட்டமைப்புகளாக அவை மாற்றப்பட்டு அபிவிருத்தி செய்யவேண்டும் - என்றனர். (அ-ஒ-110)

## ஆராய்வதற்கு...

அத்துடன், வடமாகாணத்தில் பெருமளவிலான காணிகளை விடுவிக்க அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது. எஞ்சியுள்ள காணிப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்பதே எனது எதிர்பார்ப்பு என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தங்கள் காணிகளை விடுவிக்கக் கோரி போராடி வரும் கேப்பாபிலவு மக்கள் புதுக்குடியிருப்பில் நேற்று நடைபெற்ற காணி உறுதி வழங்கும் நிகழ்வுக்கு வந்திருந்தனர். அவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்து மனு கொடுப்பதற்கு சென்றபோது பொலிஸார் வீதித் தடையைத் தாண்டி அவர்களை உட்செல்ல அனுமதிக்கவில்லை.

நீண்டநேரம் காத்திருந்த மக்களை வடமாகாண ஆளுநர் வந்து சந்தித்துக் கலந்துரையாடினார். ஆளுநரிடம் கேப்பாபிலவு மக்கள் மனுவைக் கையளித்தார்கள். இருந்தும் ஜனாதிபதியிடம் தங்கள் கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். இந்த நிலையில் புதுக்குடியிருப்புப் பிரதேச பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கேப்பாபிலவு மக்கள் சார்பில் இருவரை ஜனாதிபதியை சந்திக்க ஏற்பாடு செய்து வாகனத்தில் ஏற்றிச் சென்றார். அவர்கள் இருவரும் ஜனாதிபதியைச் சந்தித்தனர்.

இதன் பின்னர் கேப்பாபிலவு மக்கள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், கேப்பாபிலவு மக்களின் பிரச்சினை தொடர்பில் ஒரு நிமிடம் ஜனாதிபதி உரையாடினார். காணிவிடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தபோது இராணுவத் தளபதியிடம் கலந்துரையாடிவிட்டு நல்ல பதில் தருவதாகவும் அவசரமாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார் - என்றனர். (அ-ஒ-19-26)

## ஆனைக்கோட்டையில்...

இலங்கையின் பெருங்கற்கால பண்பாடுகள் நிறைந்ததாகக் கருதப்படும் ஆனைக்கோட்டையில் அடையாளம் காணப்பட்டுள்ள ஒருபகுதியில் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.


யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர்களான இரகுபதி மற்றும் இந்திரபாலா ஆகியோர் 1980 ஆம் ஆண்டுகளில் முன்னெடுத்த அகழ்வாய்வு மற்றும் மேலாய்வுகளில் இது பெருங்கற்கால பண்பாடு என உறுதிபடுத்தும் வகையில் சான்றுப் பொருட்கள் கிடைக்கப்பெற்றிருந்தன.

இந்த நிலையில் புலம்பெயர் நிதிப்பங்களிப்புடன் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், தென்னிலங்கை தொல்லியல் துறை பேராசிரியர்கள், யாழ். பல்கலைக்கழக தொல்லியல்துறை விரிவுரையாளர்கள், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் இந்த அகழ்வுகளில் பங்கெடுக்கவுள்ளனர் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

பெருங்கற்கால சான்றுகள் ஆனைக்கோட்டையில் இருப்பது ஏற்கனவே அகழ்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பெருங்கற்காலப் கலாசார மையங்களாக இனம் காணப்பட்டுள்ளன. காரைநகர், ஆனைக்கோட்டை, கந்தரோடை, வல்லிபுரம், பூநகரி, மாந்தை, தேக்கம், பொம்பரிப்பு, அக்குறுகொட, அநுராதபுரம், கதிர்காமம், இபன்கட்டுவ, அம்பாந்தோட்ட போன்ற இடங்களில் காணப்படுகின்றன. இவை எந்த ஒரு பௌத்த செல்வாக்குகளும் அற்ற நிலையில் வேர் ஊன்றி இருந்த தாகவும் பெருங்கற்கால பண்பாட்டில் குறிப்பிடப்படுகின்றது. (அ-ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிறப்பாக இடம்பெற்ற பனைத்திருவிழா

யாழ்ப்பாணம், மே 27

அழிவடைந்து வரும் பனையைக்காக்கவும் பனைசார் உணவு மற்றும் ஏனைய நன்மைகளை அனுபவித்து ஆரோக்கியம் பெறவும் பாரம்பரியத்தை அடுத்த தலைமுறையினரிடம் கடத்தும் நோக்கிலும் பனை இருந்தால் பஞ்சம் இல்லை எனும் தொனிப் பொருளில் பனைத்திருவிழா சுழிபுரம் திருவடி நிலையில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பனைசார் உணவுகளான நுங்கு, பதனீர், பனங்காய் பணியாரம் மற்றும் கூழ் போன்ற பாரம்பரிய உணவுகள் தயாரிக்கபட்டு பரிமாறப்பட்டன. தொடர்ந்து பனைசார் உரையாடல்கள், விளையாட்டுகள் என்பன இடம்பெற்றது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (அ-ஒ-125)

# சட்டமா அதிபருக்கு சேவை நீடிப்பு

கொழும்பு, மே 27

சட்டமா அதிபர் சஞ்சய் இராஜரட்ணம் அடுத்த மாதம் 27ஆம் திகதியுடன் ஓய்வு பெறவுள்ள நிலையில் அவருக்கு ஆறு மாதங்கள் சேவை நீடிப்பு வழங்குவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். சேவை நீடிப்பு கோரிக்கை ஏற்கனவே ஜனாதிபதியால் அரசமைப்புப் பேரவைக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் சேவை நீடிப்பு கோரிக்கை ஜூன் முதல் வாரத்தில் நாடாளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-ஒ-6)

### வேலையற்ற பட்டதாரிகளுக்கு

# நியமனம் வழங்காவிடின் வடக்கில் போராட்டம்!

யாழ்ப்பாணம், மே 27

**வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச பணி நியமனங்களை விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படாவிடின் வடக்கிலுள்ள அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் ஒன்றிணைத்துப் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளோம் - இவ்வாறு வடமாகாணப் பட்டதாரிகள் சங்க ஊடகப் பேச்சாளர் கிருஸ்ணராஜா டனிசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:- நாங்கள் பட்டப்படிப்பை முடித்து மூன்று வருடங்களுக்கு மேலாகி விட்டது. ஆனாலும், எமக்கான வேலைவாய்ப்புகள் இன்னமும் கிடைக்கப்பெறவில்லை.

ஜனாதிபதியின் யாழ். வருகையின்போது அவரை நேரில் சந்திக்க முயற்சித்தோம். அது எமக்குப் பயனளிக்கவில்லை. இருந்தபோதிலும் ஜனாதிபதி செயலக அதிகாரியைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவரிடம் எமது கோரிக்கைகளை முன்வைத்தோம். எமது பட்டதாரிகளின் தரவுகளைத் தருமாறு அவர் கோரியுள்ளார். அவரிடம் அவற்றைக் கையளிக்கவுள்ளோம்.

எமக்கு ஏதாவது ஒரு பொறிமுறையினை ஏற்படுத்தி வேலை வாய்ப்புகளை வழங்கவேண்டும். அது எமது கல்விக்கு ஏற்ற வேலை வாய்ப்பாக அமையவேண்டும். தமிழ்ப் பாட, அரசறிவியல் பாடப் பட்டதாரிகளுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வேலை வாய்ப்பை வழங்குவதால் பயனில்லை. அவர்கள் பெற்ற பட்டத்துக்கு ஏற்ப அவர்களுக்கான வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும் - என்றார். (அ-ஒ-66)



சுன்னாகம் பொதுநூலக நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில், உலக புத்தக தின நிகழ்வு, சுன்னாகம் பொது நூலக மண்ட பத்தில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் தமிழ் இலக்கியத்துக்கு ஆற்றிவரும் சிறந்த பங்களிப்பைப் பாராட்டி, உடுவிலைச் சேர்ந்த மூத்த பெண் எழுத்தாளர் திருமதி ஸ்ரீ.ரவீந்திரகலா, 'தமிழ்ச்சுடர்' எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ப-66)



கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் தென்மராட்சி பிரதேச செயலக கலாசாரப் பிரிவின் மாதாந்த கலை, கலாசார மேம்பாட்டு நிகழ்வுகளின் வரிசையில் வைகாசி மாதப் பொங்கல் நிகழ்வு கச்சாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. (எ-25-9)



உருத்திரபுரம் இளைஞர்கள் உருவாக்கிய 'எங்கள் பற்றிமா' எனும் காணொலிப் பாடல் பற்றிமா அன்னை ஆலயத்தில் வைத்து அண்மையில் அன்னையர்தினத்தன்று வெளியீடு செய்யப்பட்டது. நிகழ்வில் அருட்பணி ரமேஷ் அ.ம.தி. அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (எ-25-159)

# யானை மோதியதால் தடம்புரண்டது ரயில்

வவுனியா, மே 27

வவுனியா கனகராயன்குளம் காட்டுப்பகுதியில் யானையுடன் மோதி ரயில் தடம்புரண்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்ற ரயில், கனகராயன்குளம் காட்டுப்பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது ரயில் பாதையை ஊடறுத்து சென்ற யானைகளுடன் மோதுண்டுள்ளது.

இதன்காரணமாக யானை சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளதுடன், யானைக்குட்டி காயமடைந்த நிலையில் பொதுமக்களின் உதவியுடன் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக வன உயிரிகள் திணைக்களத்தால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

விபத்துக் காரணமாக நான்கு மணி நேரத்தின் பின்னர் சம்பவ இடத்துக்கு பிறிதொரு ரயில் கொண்டு வரப்பட்டு அதன் பின்னர் பயணிகள் தங்கள் பயணத்தை தொடர்ந்தனர். (ஒ-110)

# இலங்கைச் சிறையிலுள்ள பாக்.கைதிகளை விடுவிக்குக

இஸ்லாமபாத், மே 27

இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள 43 பாகிஸ்தானியர்களையும் விடுவிக்குமாறு பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவர் ரவீந்திர சந்திர விஜய் குணரத்னவிடம் பாகிஸ்தான் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் மௌசின் நக்வி கோரிக்கை விடுத்துள்ளார். இந்த பாகிஸ்தான் கைதிகளில் 10 பேர், 614 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருள்களும் 581 கிலோகிராம் வேறுசில போதைப் பொருள்களையும் படகில் எடுத்து வந்த வேளையில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கை...

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

புதுக்குடியிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற காணி உறுதி வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய 600 முழுமையான காணி உறுதிப் பத்திரங்கள் இங்கு வழங்கப்பட்டதோடு, முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 'உறுமய' வேலைத்திட்டத்தின் கீழ் ஆயிரத்து 376 இலவசப் பத்திரங்கள் வழங்கப்பட உள்ளன.

'உறுமய' காணி உறுதிப் பத்திரம் வழங்கும் திட்டம் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு முக்கியமானது.

போர் காரணமாக இப்பிரதேசத்தில் கட்டடங்கள் அழிந்து போனதுடன் பலர் தமது காணிகளைவிட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றம் என்பது மிகப் பெரிய செயற்பாடாக மாறியுள்ளது. எனவே, இந்தப் பிரதேசத்தில் உறுமய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன்,

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு முழுமையான காணி உறுதிப்பத்திரம் வழங்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இந்நாட்டில் முதன்முறையாக 20 இலட்சம் முழுமையான காணி உறுதிகளை மக்களுக்கு வழங்கும் 'உறுமய' வேலைத்திட்டம் மிகவும் முக்கியமான ஒரு வேலைத்திட்டம் என்றே கூறவேண்டும். இந்த நிலங்களில் மக்கள் நீண்டகாலமாக வாழ்ந்து வந்தபோதும் விவசாயம் செய்து வந்தாலும் அந்த மக்களுக்கு காணியில் உரிமை இருக்கவில்லை. இந்நாட்டின் அனைத்து இனங்களையும் சேர்ந்த பெருமளவிலான மக்கள் நாட்டின் விவசாயத்துக்குப் பங்களிப்புச் செய்த போதிலும் அவர்களுக்குக் காணி உரிமையை வழங்க முடியவில்லை.

நல்லாட்சி அரசாங்கத்தின்போது இது தொடர்பில் நான் சட்டம் கொண்டு வந்தபோது அதற்கு எதிராக சிலர் நீதிமன்றம் சென்றனர். ஜனாதிபதி என்ற வகையில் எனக்குக் காணி வழங்கும் அதிகாரம் இருந்தது. ஆனால் புதிய சட்டங்களை நிறைவேற்றாமல், நீதிமன்றத்துக்குச் செல்லாமல் வெள்ளையர்கள் நிலத்தை கையகப்படுத்திய அதே சட்டத்தின் கீழ் நாட்டு மக்களுக்கு முழுமையான காணி உரிமை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

இந்த நிலங்கள் உங்களுக்குரியவை. உங்களின் இரண்டு அல்லது மூன்று தலைமுறைகள் விவசாயம் செய்து வந்த நிலம் இப்போது உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அப்படியானால், இது நாட்டில் மேற்கொள்ளப்படும் மிகப்பெரிய தனியார்மயமாக்கலாகும். தெற்காசியாவில், நம் நாட்டில் மட்டுமே இதுபோன்ற திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

மாபெரும் புரட்சி மற்றும் குருதி சிந்திய பின்னரே பொது மக்களுக்கு நில உரிமை கிடைக்கிறது. நாம் புரட்சி இல்லாமல் இந்தப் பணியைச் செய்துள்ளோம்.

கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்நாட்டு மக்கள் 4 வருடங்களாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் அந்தக் கஷ்டத்தை அவர்கள் அமைதியாக அனுபவித்தனர். தற்போது பொருளாதாரம் நல்ல நிலையை எட்டியுள்ளது. இனிமேலாவது நாட்டின் பொருளாதாரம் வேகமாக வளர்ச்சியடையவேண்டும். எனவே, இதன் நன்மையை ஒரு சிலருக்கு மட்டுப்படுத்தமுடியாது. விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை முன்னெடுப்பதற்காக உங்களுக்கு இந்த நில உரிமை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் 'அஸ்வெசும' நிவாரணத் திட்டத்தை செயற்படுத்தியுள்ளது. 'அஸ்வெசும' பயனாளிகளுக்கு சமுர்த்தி திட்டத்தைப் போன்று மூன்று மடங்கு பலன்கள் கிடைக்கும். மேலும் பயனாளிகளின் எண்ணிக்கை 8 இலட்சத்தில் இருந்து 24 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிங்கள - தமிழ் புத்தாண்டு மற்றும் வெசாக் பண்டிகைக்கு குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு 10 கிலோ அரிசி வழங்கப்பட்டது.

நாடு முன்னேற்றமடைந்திருந்த சமயத்தில் அரசாங்கம் மக்களுக்கு இதனை வழங்க முடியவில்லை. வங்குரோத்தடைந்த சமயத்தில் இந்த சலுகைகளை மக்களுக்கு நாம் வழங்கியுள்ளோம். இந்த ஆண்டு இறுதிக்குள் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து விடுவிக்க முடியும் என்பதுடன், சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்கனவே பேச்சு நடத்தி வருகிறோம். அந்த நிபந்தனைகளை சட்டமாக்க எதிர்பார்ப்பதோடு, அதற்கான சட்டவரைவு ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நாட்டின் பொருளாதாரத்தை ஏற்றுமதிப் பொருளாதாரமாக மாற்றி போட்டிப் பொருளாதாரத்தை உருவாக்குவதே எமது நோக்கமாகும். அதற்காக நாடாளுமன்றத்தில் பொருளாதாரப் பரிமாற்றச் சட்டத்தை நிறைவேற்ற அனைவரும் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன், என்றும் ரணில் தெரிவித்தார். (அ-ஒ-26)

## வவுனியா...

மனையை போதனா மருத்துவமனையாக மாற்றுவதுடன் வவுனியா பல்கலைக் கழகத்துக்கும் மருத்துவ பீடமொன்று வழங்கப்படும் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாங்குளம் ஆதார மருத்துவமனையில் புனர்வாழ்வு சிகிச்சை மற்றும் மனநல அபிவிருத்தி நிலையத்தை நேற்று திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நெதர்லாந்து அரசாங்கத்தின் ஆதரவுடன் 4 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா செலவில் இந்த மருத்துவ சிகிச்சை நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இது வட மாகாணத்தில் உள்ள மிகப் பெரிய மருத்துவ புனர்வாழ்வு சிகிச்சை மற்றும் மனநல அபிவிருத்தி நிலையம் என்பதோடு மனநல மறுவாழ்வுப் பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, அறுவைச் சிகிச்சைப் பிரிவு, ஆய்வுகூடம், கதிரியக்கப் பிரிவு, வெளிநோயாளர் பிரிவு மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

நெதர்லாந்துத் தூதுவர் பொனி ஹோபேக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினைவுப் பரிசையும் வழங்கி வைத்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில், "இந்த மருத்துவப் பிரிவை இன்று திறந்து வைக்கும்போது இதன் பின்னணியைக் குறிப்பிடவேண்டும். 2009 ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னர், போர் காரணமாக வடமாகாணத்தில் தடைப்பட்ட சேவைகளை மீளமைப்பதற்கான அடிப்படைப் பணிகளை அப்போதைய அரசாங்கம் ஆரம்பித்தது. முதற்கட்டப் பணிகள் நிறைவடைந்த நிலையில், இந்தப் பிரிவுகள் அனைத்தினதும் முன்னேற்றத்துக்கு, இரண்டாம் கட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டியது அவசியமாகும். அதற்கிணங்க, வடமாகாணத்தில் சுகாதாரத் துறையின் மேம்பாட்டுக்காக புதிய மருத்துவப் பிரிவுகளை நிறுவுவதற்கு பிரதமர் என்ற ரீதியில் நெதர்லாந்து அரசாங்கத்துடன் கலந்துரையாடினேன். அப்போது வடமாகாண சபையில் இருந்த சுகாதார அமைச்சரும், முன்னாள் முதலமைச்சரும் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

போருக்கு முன்னர், கொழும்புக்கு அடுத்தபடியாக சிறந்த சுகாதார சேவையைக் கொண்ட பிரதேசமாக யாழ்ப்பாணம் திகழ்ந்தது. மேல்மாகாணம் அபிவிருத்தியடைந்த நிலையில் தென் மாகாணமும் மத்திய மாகாணமும் அபிவிருத்தியடைந்தன. வடக்கு மாகாணத்தை மீண்டும் அந்த நிலைக்குக் கொண்டு வருவதே எனது நோக்கமாகும். அதனால்தான் இந்த மருத்துவமனைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு மேம்படுத்தப்படுகிறது.

அத்துடன், 2017 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்துக்கு புதிய கட்டடத்தை நிறுவுவதற்கு நான் பிரதமராக இருந்து பணத்தை ஒதுக்கினேன். இன்று இந்த திறப்பு விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன் இந்தப் பணிகள் உடனடியாக நிறைவு செய்யவேண்டும் என்று பணித்தேன். இப்போது வடக்கு மாகாணத்தில் நவீன மருத்துவமனைகள் உள்ளன.

ராகம மருத்துவமனைக்குப் பிறகு இந்த நவீன இயந்திரங்களைக் கொண்ட ஒரே மருத்துவமனை மாங்குளம் மருத்துவமனை என்பது குறிப்பிடத்தக்கது.

போர் காரணமாக அங்கவீனமடைந்தவர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ராகம மருத்துவமனை உருவாக்கப்பட்டது. போரால் பாதிக்கப்பட்ட இப்பிரதேச மக்களுக்கு ராகம மருத்துவமனை போன்ற நவீன மருத்துவமனையை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

வடமாகாணத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 4 மருத்துவமனைகளின் பிரிவுகளில் உள்ள உபகரணங்கள் இலங்கையில் உள்ளபல மருத்துவமனைகளில் இல்லை. இந்தச் சாதனங்கள் பாதுகாக்கப்படவேண்டும். அதற்கு மருத்துவமனை நிர்வாகமும், மருத்துவமனை முகாமைத்துவமும் முயற்சி எடுக்கவேண்டும். மருத்துவமனை நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தின் சிறப்பான நிலை காரணமாக கியூபா சுகாதார சேவைகளில் முன்னணியில் உள்ளது. எனவே, மருத்துவமனை நிர்வாகத்தையும் முகாமைத்துவத்தையும் உயர் நிலைக்குக் கொண்டுவர பாடுபடவேண்டும்.

அதற்கு, உலக சுகாதார நிறுவனம் மற்றும் ஆசிய அபிவிருத்தி நிதியத்தில் இருந்தும் நிதி ஒதுக்கீடு பெறலாம். இந்தச் செயற்பாடுகள் அனைத்தினூடாகவும் நாட்டில் நம்பிக்கையான சுகாதார சேவையை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றோம் என்பதையும் கூறவேண்டும் - என்றார். (அ-ஒ-5-26)

## ரணிலுக்கு...

அதிபோர் ஜனாதிபதியைப் புகழ்ந்து தள்ளிக்கொண்டே இருந்ததை அவதானிக்க முடிந்தது.

காணி உறுதி வழங்கும் நிகழ்வில் செல்வம் அடைக்கலநாதன் கருத்துத் தெரிவிக்கையில், போரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஜனாதிபதி வருகை தந்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இம்மாவட்டத்தில் பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றை உங்களால் தான் தீர்த்து வைக்கமுடியும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கிறது. இந்த மாவட்ட அபிவிருத்திக் குழுவை உங்கள் தலைமையில் நடத்தி முல்லைத்தீவு மாவட்ட மக்களின் காணி உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கவேண்டும். காணி உறுதியில்லாத மேலும் பலர் உள்ளனர். சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத நிலை உள்ளது. எங்களுடைய மக்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறேன் - என்றார்.

மாங்குளம் மருத்துவமனை திறப்புவிழாவில் உரையாற்றிய வினோநோகராதலிங்கம், இந்தப் பகுதியில் உள்ள மருத்துவமனைகளில் போதிய வசதிகள் இல்லை. இந்த மருத்துவ புனர்வாழ்வு சிகிச்சை மற்றும் மனநல அபிவிருத்தி நிலையத்தை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தமைக்காக ஜனாதிபதிக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஏனைய மருத்துவமனைகளுக்கும் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தால், இந்தப்பகுதி மக்கள் முழுமையாகப் பயன்பெறுவார்கள். மேலும் இறுதிக்கட்டப்போரில் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வாழ்ந்த கேப்பாபிலவு பகுதி மக்களுக்கு சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத நிலை இருக்கிறது. அவர்களை தமது சொந்த மண்ணில் குடியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியைக் கோருகிறேன் - என்றார்.

மாங்குளம் மருத்துவமனை திறப்பு விழாவில் உரையாற்றிய சார்ள்ஸ் நிர்மலநாதன், இந்தப் பிரிவு வன்னி மாவட்டத்துக்குக் கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். இதற்காக முயற்சித்த அனைவருக்கும், குறிப்பாக எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வட மாகாணத்துக்கே ஒரு பெரும் வளமாக இதனைப்பெற்றிருக்கின்றோம். இந்த வளம் தொடர்ச்சியாக பேணப்படவேண்டும். அதற்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இந்த மருத்துவமனை மிகச் சிறப்பாக நடைபெற அவசியமான அனைத்து வளங்களையும் நீங்கள் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதியிடம் நான் முன்வைக்கிறேன் - என்றார். (அ-ஒ-5)

## கறுப்புக்கொடி...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வவுனியா மருத்துவமனை மற்றும் மாவட்டச் செயலகம் என்பவற்றுக்கு நேற்று பிற்பகல் வருகை தந்த நிலையில் மாவட்டச் செயலகம் முன்பாக ஒன்றுகூடிய வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தைச் சேர்ந்த தாய்மார் சிலர் ஜனாதிபதி ரணிலுக்கு எதிராகக் கறுப்புக்கொடி காட்டி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன்போது அங்கு மேலதிக பொலிஸார் மற்றும் அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு தாய்மாரை வீதிக்கு இறங்க விடாது தடுத்தனர். சிறிது நேரத்தின் பின் மாவட்டச் செயலக வாயிலுக்குச் செல்ல முற்பட்ட தாய்மாரை பொலிஸார் வழிமறித்து அங்கிருந்து அவர்களை வெளியேற்றினர். (அ-ஒ-18-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முகமாலை ஞானவைரவர் அறநெறிப் பாடசாலையின் சிறுவர் சந்தை நிகழ்வு, முன்பள்ளி முன்றிலில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் கலந்துகொண்டார். (ப-9)



'யாழ்.நண்பர்கள்' வட்டத்தின் பத்தாவது ஆண்டு நிறைவும் சமூகப் பெரியவர்களின் கௌரவிப்பு நிகழ்வும் யாழ்.நகரில் அமைந்துள்ள தனியார் விடுதி யொன்றில் அண்மையில் இடம்பெற்றன. நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (எ-25-66)



பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட, மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆடை வடிவமைத்தல், அழகுக்கலை, மனைப்பொருளியல் ஆக்கப்பொருள்கள் காட்சிப்படுத்தல் மற்றும் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு என்பன வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில், பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் த.ஜெயசீலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றன. (ப-9)

## வருடாந்தப் பெருவிழா

யாழ்ப்பாணம், மே 27

வில்லூன்றி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருவிழா, நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவிருக்கும் பெருவிழாவில் தினமும் காலை 7.45 மணிக்கும், பி.ப. 5.45 மணிக்கும் வசந்த மண்டபப் பூசை நடைபெறும். ஜூன் மாதம் 5 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு வசந்தமண்டபப்பூசை நடைபெற்று 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 9.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறுமென ஆலயபரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ப)


## வேலையாட்கள் தேவை

நீண்ட காலமாக இயங்கிக்கொண்டிருக்கும் உணவகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவைப்படுகின்றார்கள். ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. தங்குமிட வசதியும் உண்டு.

(CS/55196) N-1

**077 119 0011**

## வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிநிலைக்கு ஆட்கள் தேவை

- **கிராபிக் டிசைனர் (Graphics Designer)**
  முழுநேரம் / பகுதி நேரம்
  ( இரவு )
  பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- **ஒப்புநோக்குநர் (Proof Reader)**




ஆர்வமுள்ளவர்கள் **இன்று (27.05.2024)** திங்கட்கிழமை
**மு.ப 9.00 - 12.00 மணிவரையும்**
**பி.ப 5.00 - 7.00 மணிவரையும்**
நேரில் சமுகம்தரவும்.

**உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


## மரண அறிவித்தல்

மண்ணில்
04 . 04 . 1934



விண்ணில்
25 . 05 . 2024

### பொன்னையா நேசராஜன்

சுதுமலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நேசராஜன் அவர்கள் 25.05.2024 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா-சௌபாக்கியம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-அன்னம்மாவின் மருமகனும் காலஞ்சென்ற தனலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராமநாதர், பத்மநாதன், லீலாவதி, பூமணி, புவனசிங்கம், பாரசக்தி மற்றும் மனோன்மணி ஆகியோரின் சகோதரரும் அனுஷா, தபேந்திரன், சுஜாத்தா, சர்வானந்தா, சர்வேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவிபாலன், வசந்தி, ஜெகதாசன், ரம்யா ஆகியோரின் மாமனாரும் பிறிமிதா, கௌதம், விஜீந்திரன், கோபிதா, தர்சன், லதுர்ஷன், கிஷோன், சயந்தினி, மேனுஷன், வைஷ்ணவி, சங்கவி, சாம்பவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆதுரியனின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.05.2024) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுதுமலை மத்தி**
**மானிப்பாய்**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 928 0050**

(CS 590) V-1


### வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்
தொடர்புகளுக்கு:
(CS 589) V-1

**074 173 7684**

### மலிவு விற்பனை

கட்டில், மெத்தை, சோபா, கண்ணாடி சோக்கேஸ், கதிரை (குசன் கதிரை), கண்ணாடி மேசை என்பன விற்பனைக்குண்டு.

**077 7242 427, 0777 4127 13**

### வீடு வாடகைக்கு தேவை

யாழ் மாநகர சபை எல்லைக்குள் கட்டட வேலை செய்பவர்கள் (Labourers) தங்கி நிற்பதற்கு 2 மாதங்களுக்கு வீடு வாடகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு:

**077 959 2628**




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.05. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org